செய்திப் பணிப்பாளர்/செய்தி ஆசிரியர் 22.07.2021

**செய்தி வெளியீடு**

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100): யூன் 2021**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**

2021 யூன் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது 6.1% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கம் 2021 மே மாதம் பொருட்டு பதிவாகியவாறு 6.1% இல் அதே அளவில் உள்ளது. 2021 யூன் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புக்கள் முறையே 4.5%, 1.6% ஆக காணப்படுகின்றன. அதேவேளை, 6.3% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2020 யூன் மாதத்தில் பணவீக்கத்திற்கான உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்தான பங்களிப்புக்கள் முறையே 5.8%, 0.5% ஆக காணப்பட்டன. 2020 யூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், உணவுப் பிரிவில் அதிகரித்த சதவீதம் பதிவாகியமைக்கான பிரதான காரணம், 2021 யூன் மாதத்தில் நிலவிய உயர்வான விலை மட்டங்களே குறிப்பாக அரிசி, தேங்காய், தேங்காய் எண்ணெய், மரக்கறி, மஞ்சள்தூள் மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றின் அதிகரித்த விலைகளாகும்.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2021 மே மாதத்தில் பதிவாகிய 143.6 இருந்து 2021 யூன் மாதத்தில் 145.7 வரை அதிகரித்துள்ளது. இது, 2021 மே மாதத்துடன் ஒப்பிடுகையில் 2.1 சுட்டெண் புள்ளிகள் அல்லது 1.5 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 1.23% இனாலும் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதி 0.22% இனாலும் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்புக்கள் அரிசி, மரக்கறி, தேங்காய் எண்ணெய், புதிய மீன் கருவாடு, மைசூர் பருப்பு, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், சீனி, எலுமிச்சம்பழம், வெள்ளைப்பூடு, முட்டை, பச்சை மிளகாய், கோழி இறைச்சி, மிளகாய்த்தூள், பாசிப் பயறு, மஞ்சள்தூள் மற்றும் கடலை என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் விலை குறைவுகள் புதிய பழங்கள் மற்றும் தேங்காய் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 யூன் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புகளுக்கு பிரதான காரணம், ‘போக்குவரத்து’(பெற்றோல் மற்றும் டீசல்), ‘சுகாதாரம்’ (மருத்துவ/பாமசி பொருட்களின் கொள்வனவு) மற்றும் ‘வீடமைப்பு,நீர்,மின்வலு,எரிவாயு,ஏனைய எரிபொருள்கள்’(மண்ணெண்ணெய்) ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். மேலும், ‘தளபாடம், குடித்தன உபகரணம் & வழமையான குடித்தன பராமரிப்பு’ பிரிவில் சற்று விலை அதிகரிப்பு பதிவாகியது. எனினும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில், ‘அற்ககோல் பானங்கள், புகையிலை & தியக்க மருந்துகள்’ பிரிவு பொருட்டு ஓரளவு விலைக் குறைவு பதிவாகியது. அதேநேரம், ‘ஆடையும் காலணியும்’, ‘தொடர்பாடல்’, ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’, ‘கல்வி’, ‘உணவகங்களும் ஹோட்டல்களும்’ மற்றும் ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’ ஆகிய பிரிவுகளின் விலைச் சுட்டெண்கள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.

2021 யூன் மாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது, 2021 மே மாதத்தில் பதிவாகிய 4.2% இருந்து 4.1% வரை குறைந்துள்ளது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) |
| **2020** | யூன் | 137.3 | 138.9 | 1.4 | 0.7 | 6.3 | 4.4 |
| | யூலை | 137.3 | 139.4 | 0.0 | 0.4 | 6.1 | 4.5 |
| | ஒகஸ்ட் | 137.8 | 139.9 | 0.4 | 0.4 | 6.2 | 4.6 |
| | செப்ரெம்பர் | 138.9 | 140.4 | 0.8 | 0.4 | 6.4 | 4.8 |
| | ஒக்ரோபர் | 139.1 | 140.5 | 0.1 | 0.1 | 5.5 | 4.5 |
| | நவம்பர் | 139.8 | 140.6 | 0.5 | 0.1 | 5.2 | 4.5 |
| | டிசம்பர் | 141.2 | 140.5 | 1.0 | -0.1 | 4.6 | 4.7 |
| **2021** | ஜனவரி | 142.1 | 141.0 | 0.6 | 0.4 | 3.7 | 4.2 |
| | பெப்ரவரி | 142.8 | 141.3 | 0.5 | 0.2 | 4.2 | 4.1 |
| | மார்ச் | 142.1 | 141.8 | -0.5 | 0.4 | 5.1 | 4.3 |
| | ஏப்ரல் | 142.2 | 142.5 | 0.1 | 0.5 | 5.5 | 4.1 |
| | மே | 143.6 | 143.7 | 1.0 | 0.8 | 6.1 | 4.2 |
| | யூன் | 145.7 | 144.6 | 1.5 | 0.6 | 6.1 | 4.1 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்